<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 75/2024**

**PW. 2**

**Date: 02.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சிங்கார வடிவேல் | வயது | 40 |
| கணவர்/தந்தை பெயர் | துரைராஜு | தொழில் | – |
| கிராமம் | தையூர் | வட்டம் | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **02th March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 கு.வி.மு.ச கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரரும் நானும் ஒரே அடுக்குமாடி குடியிருப்பில் சுமார் 7 ஆண்டுகளாக ஒன்றாக வசித்து வருகிறோம்.1 ஆம் எதிரியும் அங்கு தான் தங்கி இருந்தார். நாங்கள் நட்பாக பழகி வந்த காலத்தில் 1 ஆம் எதிரி புகார்தாரரிடம் சுமார் 10 லட்சம் பணம் கேட்டுள்ளார். கடந்த 2021 ஆம் ஆண்டு தான் இந்த சம்பவம் நடந்தது. புகார்தாரர் தன்னுடைய 2 கிரேட் காட் மூலமாக ரூ.2,50,000/-யும் வங்கியில் இருந்து தனி நபர் கடன் மூலமாக ரூ.7 லட்சமும் கடன் கொடுத்துள்ளார். 1 ஆம் எதிரி புகார்தாரரிடம் பணம் பெற்றதுபோல எங்கள் அடுக்குமாடி குடியிருப்பில்

வசிக்கும் பல பேரிடம் பணம் பெற்றுள்ளார்.

2. 1ஆம் எதிரி எங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருப்பு நல சங்கத்தில் கணக்குகளை பராமரிப்பு பணிகளை பார்த்து வந்தார். அதில் வந்த பணத்தில் ரூ.25,000/- – ரூ. 30,000/- அளவுக்கு 1ஆம் எதிரி கொண்டு சென்றுவிட்டார். அதனை நாங்கள் அவரிடம் இருந்து மீட்டுவிட்டோம். அவ்வாறு 1ஆம் எதிரி புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்ற விவரத்தை அவர் என்னிடம் ஒரு முறை சொன்னார். 1ஆம் எதிரி பணம் சம்பந்தமான பிரச்சனையில் சிக்கியபிறகு அங்கு இருந்து சொந்த ஊருக்கு சென்று விட்டார். புகார்தாரர் அந்த விவரத்தை என்னிடம் சொன்னபிறகு நான் அவருக்கு போன் செய்தேன். அதற்கு அவர் புகார்தாரரிடம் தான் பேசிக்கொள்வதாகவும் அதில் என்னை தலையிடவேண்டாம் என்று சொன்னார்.

3. 1ஆம் எதிரி புகார்தாரரிடம் கடன் பெற்று ஏமாற்றியதால் புகார்தாரர் எங்கள் அடுக்குமாடி குடியிருப்பில் இருந்த வீட்டையும் விற்றுவிட்டார். புகார்தாரர் பல முறை முயற்சி செய்தும் எதிரியிடம் இருந்து பணத்தை திரும்ப பெறமுடியவில்லை. அதனால் புகார்தாரர் நீதிமன்றத்தில் புகார் தாக்கல் செய்துள்ளார். எனக்கு இந்த விவரங்கள் தெரியும் என்பதால் என்னை சாட்சியம் அளிப்பதற்காக என்னையும் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்துள்ளார். நான் நடந்த விவரங்களை சாட்சியமாக கொடுத்துள்ளேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.